**புத்தசாசனம், மதங்கள் மற்றும் கலாசார விவகார அமைச்சு**

**காலி மரபுரிமை மன்றம்**

GALLE HERITAGE FOUNDATION

# வெற்றிடங்கள் அறிவித்தல்

புத்தசாசனம், மதங்கள் மற்றும் கலாசார விவகார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் காலி மரபுரிமை மன்றத்தில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01. பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி (MM 1-1)

**பதவிகளின் எண்ணிக்கை - 01**

01.01 தகைமைகள் - வெளிவாரி விண்ணப்பதாரிகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம் சகிதம் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் 05 வருடகாலம் நிறைவேற்று மட்டப் பதவியொன்றில் சேவையாற்றியிருத்தல்.

01.02 **தகைமைகள் - உள்வாரி விண்ணப்பதாரிகள்**

1. (அ) காலி மரபுரிமை மன்றத்தில் கனிஷ்ட முகாமைத்துவ (JM) சேவை வகுதியில் 1ஆம் தரத்தில் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

(ஆ) பல்வேறு குழுக்களுடன் நேரடியாக நிர்வகிக்கும் உணரக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் வினைத்திறனுடனான முகாமைத்துவம் மற்றும் மனித வளத்தை அதி உயர்ந்த மட்டத்தில் பயன்படுத்தக் கூடிய அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**2. கட்டாயத் தகைமை**

தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கு சேவைக் காலத்தினுள் சகல சம்பள உயர்வுகளை உரிய தினத்தில் பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்த காலப்பகுதியில் ஒழுக்காற்று தண்டனையைப் பெறாதவராக இருக்க வேண்டும்.

01.03 **சம்பள அளவு: ரூபா 91,690 - 2,480x10 - 3,450x15 - 168,240**

(முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 01/2025 MM 1-1 பிரகாரம்)

(மேற்கூறிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2025ஆம் வருடத்திற்கு உரித்தான அடிப்படைச் சம்பளம் 71,730.00 ரூபாவாகும். திறைசேரியினால் அனுமதிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியாக 17,800.00 ரூபா உரித்தாகும்).

01.04 **வயது**

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

## 02. நிர்வாக அதிகாரி (JM 1-1)

**பதவிகளின் எண்ணிக்கை - 01**

02.01 **தகைமைகள் - வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மனிதவள முகாமைத்துவத் துறையில் குறைந்தபட்சம் 03 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

02.02 **தகைமைகள் - உள்வாரி விண்ணப்பதாரிகள்**

01. க.பொ.த. (உ.தரப்) பரீட்சையில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்த முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் / தொழில்நுட்பம் அல்லாத) சேவை வகுதியில் 1ஆம் தரப் பதவியில் 05 வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல்.

அல்லது

02. செயற்றிட்ட உதவியாளர், செயற்றிட்ட உதவியாளர் (கணக்கு) சேவை வகுதி பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடத்திற்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் ஐந்து (05) வருடங்களில் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல்.

02.03 **சம்பள அளவு: ரூபா 72,650 - 1,360x10 - 2,040x18 - 122,970**

(முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 01/2025 JM 1-1 பிரகாரம்)

(மேற்கூறிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2025ஆம் வருடத்திற்கு உரித்தான அடிப்படைச் சம்பளம் 58,615.00 ரூபாவாகும். திறைசேரியினால் அனுமதிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியாக 17,800.00 ரூபா உரித்தாகும்).

**02.04 வயது**

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

## 03. கணக்கியல் அதிகாரி (JM 1-1)

**பதவிகளின் எண்ணிக்கை - 01**

03.01 **தகைமைகள் - வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் (வர்த்தமானி/முகாமைத்துவம்/கணக்கியல்) பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது நான்கு வருட உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்.

மற்றும்

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் (ICASL) அல்லது பட்டய முகாமைத்துவ கணக்கியல் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் (CIMA) அல்லது கணக்கியல் சான்றுபடுத்துபவர்களின் சங்கத்தின் இடைநிலைப் பரீட்சையில் (ACCA) சித்தியடைந்திருத்தல்.

**03.02 தகைமைகள் - உள்வாரி விண்ணப்பதாரிகள்**

01. செயற்றிட்ட உதவியாளர், செயற்றிட்ட உதவியாளர் (கணக்கு) சேவை வகுதி பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடத்திற்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் ஐந்து (05) வருடங்களில் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல்.

03.03 **சம்பள அளவு: ரூபா 72,650 - 1,360x10 - 2,040x18 - 122,970**

(முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 01/2025 JM 1-1 பிரகாரம்)

(மேற்கூறிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2025ஆம் வருடத்திற்கு உரித்தான அடிப்படைச் சம்பளம் 58,615.00 ரூபாவாகும். திறைசேரியினால் அனுமதிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியாக 17,800.00 ரூபா உரித்தாகும்).

03.04 **வயது**

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

## 04. பாதுகாப்பு அதிகாரி (PL 1)

**பதவிகளின் எண்ணிக்கை - 03**

04.01 **தகைமைகள்**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அரச அல்லது தனியார்துறை நிறுவனமொன்றில் பாதுகாப்பு சேவையில் 2 வருடத்திற்குக் குறையாத சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல்.

04.03 **சம்பள அளவு: ரூபா 40,500 - 450x10 - 490x7 - 540x7 - 590x15 - 62,530**

(முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 01/2025 PL 1 பிரகாரம்)

(மேற்கூறிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2025ஆம் வருடத்திற்கு உரித்தான அடிப்படைச் சம்பளம் 36,375.00 ரூபாவாகும். திறைசேரியினால் அனுமதிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியாக 17,800.00 ரூபா உரித்தாகும்).

04.04 **வயது**

18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**மேற்கூறிய பதவிகளுக்குரித்தான ஏனைய தகவல்கள்**

(1) ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவத்துடனான நிரந்தர பதவிகளாகும்.

(2) நியமன நாள் முதல் 03 வருட காலத்திற்கு தகுதிகாண் காலத்தின் கீழ் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

(3) ஆட்சேர்க்கும் முறை: காலி மரபுரிமைகள் மன்றத்தின் முகாமைத்துவ சபையின் அனுமதி மற்றும் புத்தசாசனம், மதங்கள் மற்றும் கலாசார விவகார அமைச்சின் செயலாளரின் அனுமதியின் பிரகாரம் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் பொருத்தமானவர் தெரிவு செய்யப்படுவர்.

(4) விண்ணப்பதாரரைப் பற்றி விசாரிப்பதற்காக உறவினரல்லாத இரு நபர்களின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்தை விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(5) அமைச்சு / திணைக்களம்/மாகாண அரச சேவை /அரச கூட்டுத்தாபனம்/நியதிகள் சபை மற்றும் நியதிகள் சட்ட நிறுவனங்களில் தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப் படிவத்தை நிறுவனத்தின் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும்.

(6) விண்ணப்பப் படிவத்தை www.galleheritage.gov.lk காலி மரபுரிமை உத்தியோகபூர்வ இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**சகல விண்ணப்பதாரர்களும்,**

- இலங்கைப் பிரஜைகளாக இருக்க வேண்டும்.
- பதவிக்கு ஒப்படைக்கப்படும் செவ்வனே நிறைவேற்றுவதற்குத் தேவையான உடல் உள தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- சிறந்த நன்னடத்தையுடையவராக இருக்க வேண்டும்.

மேற்கூறிய பதவிகளுக்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் தமது தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை 2025-12-21ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்ப வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பப் படிவங்கள் அறிவிக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**காலி மரபுரிமை மன்றம்,**
**இல. 12, ரெம்பாட் வீதி, கோட்டை, காலி.**
**தொ.இல. 0912246784**